[1991 செப்டம்பர் 23 [திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

நிலையம் என்ற பெயரை மீண்டும் சூட்டுவதற்கு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக நம்முடைய நாட்டிற்குச் சுதந்திரம் வாங்கிக் கொடுத்த அண்ணல் மகாத்மா காந்தி அடிக்கடிச் சொல்வார், 'இந்த நாட்டிற்கு எப்போது பரிபூர்ணமான சுதந்திரம் வந்து விட்டதாக நான் கருதுவேன் என்றால், பருவப் பெண், 16 வயது நிரம்பிய பருவப் பெண் தன்னுடைய உடலிலே நகைகள், ஆபரணங்கள் பூட்டி, அச்சமின்றி நடுநிசியில் எந்த இடத்திற்கும் போய் வருகிற சூழ்நிலை எப்போது ஏற்படுகிறதோ அப்போது தான் இந்த நாட்டிற்குப் பரிபூரணமான சுய இராஜ்யம் வந்து விட்டதாக நான் கருதுவேன்' என்று மகாத்மா காந்தியடிகள் சொல்வார்கள். நான் தங்களிடத்திலே கேட்டுக்கொள்வது, உங்களுடைய ஆட்சிக் காலத்தில் அந்த நிலை தமிழகத்திலே ஏற்பட வேண்டுமென்று விரும்பி கேட்டுக்கொள்கிறேன். தமிழகம் மீண்டும் அமைதிப் பூங்காவாகத் திகழ நீங்கள் எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் எங்கள் ஆதரவு உண்டு என்று கூறி அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரிவான பதிலுரை தர வேண்டுமென்று கேட்டு இருக்கிறார்கள். அதற்குரிய கால அவகாசம் இப்போது இருக்காது என்பதைக் கருத்திலே கொண்டு அவர்கள் நாளை காலை பதிலுரை வழங்கலாம் என அவையின் ஒப்புதலோடு அறிவித்துக் கொள்கிறேன். நாளை காலை வினா-விடை நேரத்தை ரத்து செய்யலாம் என்றும் கருதுகிறேன். அதற்கான தீர்மானத்தை முன்னவர் அவர்கள் கொண்டு வருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

## 6. தீர்மானம்

### விதி 32-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப்பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ 24—9—1991 அன்று தளர்த்தி, அந்நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டுமென்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

பிற்பகல் 2–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க.

[பேரவைத் தலைவர்] [1991 செப்டம்பர் 23

மறுப்போரே இல்லையென்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவையின் இன்றைய காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றது.

பேரவை மீண்டும் இன்று பிற்பகல் 4—30 மணிக்கு கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2—31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

பிற்பகல் 4.30

பேரவை பிற்பகல் 4.30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் கூடியது.

5. மானியக் கோரிக்கைகள், 1991-92, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(ஈ) கோரிக்கை எண் 27—கதர் கிராமத் தொழில்கள்.

(உ) கோரிக்கை எண் 48—ஊரகத் தொழில்கள்

(ஊ) கோரிக்கை எண் 60—ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும் மானியக்கோரிக்கை எண். 27 கதர்-கிராமத் தொழில்கள் மாண்புமிகு ஊரகத் தொழிற்துறை அமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு திரு. முகமது ஆசிப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கதர் கிராமத் தொழில்கள் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 7,29,90,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்'' என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 749. திரு மா. சுந்தரதாஸ்.

THIRU M. SUNDARADASS: Mr. Speaker Sir, to discuss the need to provide the financial assistance to Cottage Industries run by women and physically handicapp d persons to produce washing soap hand-made paper and dolls, I move—

> " That the allotment of. Rs. 7,29,90,000 under Demand No. 27, Khadi and Village Industries be reduced by Rs 100."